பரந்தூர் பசுமை விமான நிலையத்திற்காக 5,746 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய தமிழக அரசு அனுமதி: அரசாணை வெளியீடு

சென்னை, நவ.25– பரந்தூர் பசுமை விமான நிலையத்திற்காக 5,746.18 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து தொழில், முதலீட்டு மேம்பாடு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் அருண்ராய் அரசாணை ஒன்றை வெளியிட்டார். அந்த அரசாணையில் கூறப்பட்டு இருப்பதாவது:

தற்போதைய பொருளாதார மற்றும் தொழில் வளர்ச்சியின் தேவையை முன்னிட்டு, சென்னையில் பயணிகள் விமான சேவை மற்றும் சரக்கு போக்குவரத்திற்காக சர்வதேச பசுமை விமான நிலையத்தை உருவாக்க தமிழக அரசு முன்வந்தது. 2028 ம் ஆண்டுக்கு பிறகு சென்னை விமான நிலையத்தின் செயல்பாடு நிறைவடைந்துவிடும் என்பதாலும், 2037ம் ஆண்டில் விமான பயணிகளின் எண்ணிக்கை 50 மில்லியனை எட்டிவிடும் என்பதாலும் இந்த முடிவை அரசு எடுத்தது.

பசுமை விமான நிலையத்தை அமைக்கும் இடம் குறித்த ஆய்வுகளுக்குப் பிறகு, திருப்போரூர், படாளம், பன்னூர் மற்றும் பரந்தூர் ஆகிய 4 இடங்களின் சாத்தியக்கூறு அறிக்கையை இந்திய விமானநிலையங்கள் ஆணையம் தயாரித்தது. அதில் பன்னூர் மற்றும் பரந்தூர் ஆகிய இடங்கள் தேர்வு செய்யப்பட்டன.

அந்த இடங்களில் உள்ள நிலத்தின் விலை, வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை, அருகில் உள்ள ரெயில் போக்குவரத்து வசதி உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை கருத்தில் கொண்டு, சர்வதேச பசுமை விமான நிலையத்தை உருவாக்கும் இடமாக காஞ்சீபுரம் மாவட்டம் பரந்தூர் தேர்வு செய்யப்பட்டது.

மிக அதிக அளவில் நில ஆர்ஜிதம்

அந்த வகையில் பரந்தூர் கிராமம் உள்ளிட்ட 20 கிராமங்களில் 3,774.01 ஏக்கர் பட்டா நிலத்தை கையகப்படுத்தவும், 1,972.17 ஏக்கர் அரசு நிலத்தை (மொத்தம் 5,746.18 ஏக்கர்) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்திற்கு (டிட்கோ) ஒப்படைக்கவும் அரசுக்கு காஞ்சீபுரம் கலெக்டர் முன்மொழிவை அனுப்பினார். அதில் 1,085.62 ஏக்கர் நிலம் நஞ்செய் நிலமாக உள்ளன. இவற்றையும் ஆர்ஜிதம் செய்வதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மிகவும் அதிக அளவில் நில ஆர்ஜிதம் நடைபெறுவதால், கூடுதல் பணியாளர்களையும், சிறப்பு அதிகாரிகளையும் நியமிக்க வேண்டும் என்றும் வாடகை வாகன வசதிகள் செய்து தர வேண்டும் என்றும் அரசுக்கு நில நிர்வாக ஆணையர் பரிந்துரைத்தார். மேலும் இதற்கு ஒரு ஆண்டுக்கான செலவாக ரூ.19.25 கோடி நிதி ஒதுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அவரது கோரிக்கையை அரசு பரிசீலித்து, அவர் கேட்டுக் கொண்டபடி 2 ஆண்டுகளுக்கு தேவையான 326 தற்காலிக சிறப்பு பணியிடங்களுக்கான அனுமதியையும், ரூ.19.25 கோடி நிதியை அனுமதித்தும் அரசு உத்தரவிடுகிறது.

அதுபோல, 5,746.18 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு தொழில்களுக்கான நில ஆர்ஜித சட்டத்தின்படியோ அல்லது தனிப்பட்ட பேச்சுவார்த்தை மூலமாகவோ ஆர்ஜிதம் செய்வதற்கான அனுமதியை அளித்து அரசு உத்தரவிடுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அங்குள்ள விவசாய நிலங்களை அரசு எடுக்கக் கூடாது என்று ஏற்கனவே 450 நாட்களுக்கும் மேலாக அப்பகுதி கிராம மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் தற்போது இந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் 5.47 லட்சம் பிளஸ்–1 மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கும் திட்டம்: அமைச்சர் உதயநிதி துவக்கினார்

சென்னை, நவ.25–

தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகள், பகுதியாக உதவிப்பெறும் பள்ளிகளில் படிக்கும் பிளஸ்1 மாணவர்கள் 5 லட்சத்து 47 ஆயிரத்து 676 பேருக்கு சைக்கிள் வழங்கும் திட்டத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.

சென்னை தண்டையார்பேட்டை பட்டேல் நகரில் உள்ள சென்னை மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற பிளஸ்–1 மாணவ, மாணவிகளுக்கு சைக்கிள் வழங்கும் நிகழ்ச்சியில், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

மேலும், அமைச்சர்கள் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பி.கே.சேகர்பாபு, செஞ்சி கே.எஸ்.மஸ்தான், சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, துணைமேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி கமிஷனர் டாக்டர். ஜெ.ராதாகிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில், திட்ட தொடக்கத்தின் அடையாளமாக 10 மாணவ, மாணவிகளுக்கு சைக்கிள்களை அமைச்சர் உதயநிதி வழங்கி பேசியதாவது:–

பள்ளி மாணவர்கள் சாலைகளில் செல்லும்போது சைக்கிளை கவனமாக ஓட்டி செல்ல வேண்டும். மாணவர்கள் படிப்பு மட்டுமல்லாது, விளையாட்டிலும் அதிகளவு ஈடுபாடு காட்டவேண்டும். ஆசிரியர்கள் பள்ளிகளில் உடற்பயிற்சி வகுப்புகளை கடன் வாங்குவதை தவிர்த்துவிட்டு, எங்கள் குழந்தைகள் விளையாட வாய்ப்பு கொடுக்க வேண்டும். அதிகளவு விளையாட்டு வீரர்கள் தமிழகத்தில் உருவாக வேண்டும் என்றார்.

கோவை தனியார் என்ஜினீயரிங் கல்லூரியில் 2ம் ஆண்டு மாணவருக்கு 'ராகிங்' கொடுமை: சீனியர் மாணவர்கள் உட்பட 3 பேர் கைது

கோவை, நவ. 25–

கோவையில் உள்ள என்ஜினீயரிங் கல்லூரியில் படிக்கும் 2ம் ஆண்டு மாணவருக்கு ராகிங் செய்து தாக்கியதாக சீனியர் மாணவர்கள் உட்பட 3 பேரை போலீசார் கைது செய்தனர்.

கோவை திருச்சி சாலை சூலூரில் தனியார் என்ஜினீயரிங் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி உள்ளது. இக்கல்லூரியில், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த 18 வயது இளைஞர் பி.இ. மெக்கட்ரானிக்ஸ் இரண்டாம் ஆண்டு படித்து வருகிறார். கல்லூரிக்கு சொந்தமான விடுதியில் தங்கியிருந்து அவர் வகுப்புக்குச் சென்று வந்தார். அவருடன் 12 மாணவர்கள் அதே வகுப்பில் படிக்கின்றனர். இந்நிலையில், 2ம் ஆண்டு படிக்கும் 18 வயது மாணவர், கடந்த 22ம் தேதி கல்லூரி விடுதியில் இருந்தார்.

அப்போது கல்லூரி விடுதியில் பி.இ. மெக்கட்ரானிக்ஸ் இறுதி யாண்டு படிக்கும் கரூரை சேர்ந்த முத்துக்குமார் (வயது 21), பி.இ. சிவில் இறுதியாண்டு படிக்கும் கும்பகோணத்தை சேர்ந்த கோகுல் (21) ஆகியோரும் மாணவர்கள் விடுதிக்கு வந்தனர். அவர்கள் விடுதியில் இருந்த மாணவர்களிடம், சீனியர் முன் கால் மேல் கால் போட்டு அமரக் கூடாது, முழுக்கை சட்டை அணிய வேண்டும், சீனியர் மாணவர்கள் வந்தால் மரியாதை செலுத்த வேண்டும் என அறிவுறுத்தினர். இது பிடிக்காத அந்த 18 வயது மாணவர் அங்கிருந்து வெளியே சென்றார். இதனால் அவர் மீது சீனியர் மாணவர்கள் ஆத்திரமடைந்தனர். அதைத் தொடர்ந்து, அந்த 2ம் ஆண்டு மாணவர் மற்றும் அவருடன் படிக்கும் 12 மாணவர்களை கல்லூரிக்கு வெளியே உள்ள அறைக்கு சீனியர் மாணவர்கள் வரவழைத்து எச்சரித்தனர். தொடர்ந்து அந்த 18 வயது மாணவரை தவிர, அவருடன் படிக்கும் மற்ற 12 மாணவர்களையும் கல்லூரிக்கு அனுப்பினர்.

ஆனால் அந்த 18 வயது மாணவரை மட்டும் முத்துக்குமார், கோகுல் ஆகியோர் மோட்டார் சைக்கிளில் ஏற்றி சூலூரில் உள்ள ஒரு டீக்கடையில் பணியாற்றி வரும் முத்துக்குமாரின் நண்பரான தனபால் (25) என்பவரின் அறைக்கு அழைத்து சென்றனர். அங்கு வைத்து 3 பேரும் அந்த 18 வயது மாணவரை தாக்கி, தகாத வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். இதில் 18 வயது மாணவருக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டது. இதனால், பயந்து போன அந்த மாணவர், கல்லூரி வார்டனிடம் தகவல் தெரிவித்துவிட்டு, சூலூர் போலீசாரிடம் நடந்த சம்பவம் தொடர்பாக புகார் அளித்தார்.

தன்னை ராகிங் செய்து மிரட்டி, தாக்கிய சீனியர் மாணவர்கள் மற்றும் டீக்கடை ஊழியர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என புகாரில் தெரிவித்திருந்தார். அதன் பேரில், சூலூர் போலீசார் ராகிங் தடுப்புச் சட்டம், தகாத வார்த்தைகளில் திட்டுதல், கொலை மிரட்டல் உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ் மூவர் மீது வழக்குப் பதிந்தனர். தொடர்ந்து தலைமறைவாக இருந்த முத்துக்குமார், கோகுல் மற்றும் தனபால் ஆகியோரை போலீசார் கைது செய்தனர்.

கோவையில் கடந்த 6ந்தேதி ஒரு தொழில்நுட்ப கல்லூரியில் 2ம் ஆண்டு மாணவரை சீனியர் மாணவர்கள் 8 பேர் சேர்ந்து மொட்டை அடித்து ராகிங் செய்த சம்பவத்தில் 7 பேர் கைது செய்யப்பட்டனர். இது நடந்து ஒரு மாதம் கூட ஆகாத நிலையில் கோவையில் மேலும் ஒரு கல்லூரி மாணவருக்கு ராகிங் கொடுமை அரங்கேறி இருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

நாடாளுமன்ற தேர்தல்: தமிழக எம்.பி. தொகுதிகளுக்கான தேர்தல் அதிகாரிகள் நியமனம்

சென்னை, நவ.25–

நாடாளுமன்ற தேர்தலையொட்டி தமிழகத்தின் எம்.பி. தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அதிகாரிகளை (ஆர்.ஓ.) நியமனம் செய்து இந்திய தேர்தல் கமிஷன் அறிவிப்பாணை வெளியிட்டுள்ளது.

தமிழக அரசிதழில் இந்திய தேர்தல் கமிஷனின் அறிவிப்பாணை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, அடுத்த ஆண்டு நடக்கவுள்ள நாடாளுமன்ற தேர்தலையொட்டி தமிழகத்தின் 39 எம்.பி. தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அதிகாரிகளாக யார் யார்? நியமிக்கப்படுவார்கள் என்பதை இறுதி செய்து அறிவிப்பாணை வெளியிடப்படுகிறது.

திருவள்ளூர் தொகுதிக்கு (எஸ்சி) திருவள்ளூர் மாவட்ட கலெக்டர்; சென்னை வடக்கு, சென்னை தெற்கு மற்றும் சென்னை மத்தி தொகுதிகளுக்கு சென்னை மாநகராட்சி மண்டல கூடுதல் அல்லது இணை அல்லது துணை கமிஷனர்;

ஸ்ரீபெரும்புதூர் தொகுதிக்கு செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர்; காஞ்சீபுரம் (எஸ்சி) தொகுதிக்கு காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர்; ஆரணிக்கு திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அதிகாரி; பொள்ளாச்சிக்கு கோவை கூடுதல் கலெக்டர் அல்லது மாவட்ட வருவாய் அதிகாரி ஆகியோர் தேர்தல் நடத்தும் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மற்ற அனைத்து நாடாளுமன்ற தொகுதிகளுக்கும் அந்த தொகுதி அமைந்துள்ள மாவட்ட கலெக்டர்கள் தேர்தல் நடத்தும் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளனர். அதுபோல ஒவ்வொரு தொகுதிக்கும் துணை தேர்தல் நடத்தும் அதிகாரிகளையும் (ஏ.ஆர்.ஓ.) நியமித்து இந்திய தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது. அந்த வகையில் ஒவ்வொரு நாடாளுமன்ற தொகுதிக்கும் சப்–கலெக்டர், தாசில்தார் உள்பட 12 உயர் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2025–26ம் நிதியாண்டுக்குள் எழும்பூர் – திருச்சி வழித்தடத்தில் 130 கி.மீ வேகத்தில் ரெயில் இயக்க தெற்கு ரெயில்வே முடிவு

சென்னை, நவ.25–

சென்னை எழும்பூர் – விழுப்புரம் – திருச்சி வழித்தடத்தில் ரெயில்களின் வேகத்தை 2025–26ம் நிதியாண்டுக்குள் 130 கி.மீ வேகத்தில் இயக்க தெற்கு ரெயில்வே முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக, தெற்கு ரெயில்வே வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:–

தெற்கு ரெயில்வேயின் கீழ் உள்ள ஜோலார்பேட்டை – சேலம் – கோவை வழித்தடத்தில் இயக்கப்படும் ரெயில்களின் வேகம் 2023–24ம் நிதியாண்டுக்குள் அதாவது 2024ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் மணிக்கு 130 கி.மீ. வேகத்தில் இயக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. சென்னை எழும்பூர் – விழுப்புரம் – திருச்சி வழித்தடத்தில் இயக்கப்படும் ரெயில்கள் 2025–2026ம் நிதியாண்டுக்குள் 130 கி.மீ வேகத்திலும், திருச்சி – திண்டுக்கல் – மதுரை – நெல்லை – நாகர்கோவில் வழித்தடத்தில் இயக்கப்படும் ரெயில்களின் வேகம் 2026–2027ம் நிதியாண்டுக்குள்ளும் மணிக்கு 130 கி.மீ வேகத்துக்கு உயர்த்த திட்டமிடப்பட்டு உள்ளது.

இதேபோல கரூர் திண்டுக்கல், மயிலாடுதுறை திருவாரூர், ஆரல்வாய்மொழி நான்குநேரி மேலப்பாளையம், மதுரை திருமங்கலம் இடையிலான வழித்தடத்தில் இயக்கப்படும் ரெயில்கள் வேகம் 2024ம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் மணிக்கு 110 கி.மீ வேகத்தில் இயக்கப்படும். அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதத்துக்குள் 1,225 கி.மீ ரெயில் தண்டவாளம் மறுசீரமைப்பு பணி முடிக்க இலக்க நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ரெயிலின் வேகத்தை அதிகரிப்பது போல பாலங்களை வலுப்படுத்தல், தடுப்புச்சுவர்கள் அமைப்பது, தானியங்கி சிக்னல் அமைப்பை மேம்படுத்துவது உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மெட்ரோ ரெயிலில் ரூ.5 கட்டணத்தில் பயணிக்கலாம்: சிறப்பு சலுகை அறிவிப்பு

சென்னை, நவ.25

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் அடித்தள நாள் டிசம்பர் 3ந் தேதி கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி 'கியூ ஆர் கோடு' மூலம் பயணச்சீட்டு வாங்கும் பயணிகளுக்கு ரூ.5 மட்டுமே கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் அடித்தள தினத்தை நினைவு கூரும் வகையிலும், பயணிகளின் அனுபவத்தை மேம்படுத்தவும், டிஜிட்டல் பயணச்சீட்டை ஊக்குவிக்கவும் இந்த சிறப்பு கட்டண சலுகை வழங்கப்படுகிறது.

இந்த சலுகை டிசம்பர் 3ந் தேதி மட்டுமே வழங்கப்படுகிறது. பயணிகள் இந்த சலுகையை பயன்படுத்திக்கொள்ளுமாறு சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

dhani Loans & Services

தனி லோன்ஸ்அண்ட் சர்வீசஸ் லிமிடெட்
(முன்னதாக இந்தியாபுல்ஸ் கன்ஸ்யூமர் ஃபைனான்ஸ் லிமிடெட்)
பதிவு அலுவலகம்: 1/1 இ முதல் தளம், கிழக்கு படேல் நகர், நியூ டெல்லி - 110 008
CIN: U74899DL1994PLC062407

கிளை அலுவலகத்தை மாற்றுவது/மூடுவது பற்றிய பொது அறிவிப்பு

தனி லோன்ஸ்அண்ட் சர்வீசஸ் லிமிடெட் (முன்னதாகஇந்தியாபுல்ஸ் கன்ஸ்யூமர் ஃபைனான்ஸ் லிமிடெட்) நிறுவனத்தின்கிளை கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி மாற்றப்படுகிறது/ மூடப்படுகிறதுஎன்பதுஇதன் மூலம் அறிவிக்கப்படுகிறது:

பழைய முகவரி	புதிய முகவரி
எண்: 141/6, 3வது தளம், எம்.பி. சாரதி நகர், புதிய பை பாஸ் சாலை, கதிதபத்ரை, வேலூர் - 632012.	கதவு எண். 306A, ஸ்ரீ பாலாஜி வளாகம், பாலார் பாலம் அருகில், விருதம்பேட்டை, வேலூர் - 632006.

எங்கள் வாடிக்கையாளர் உதவிஎண் 0124-6555-555-ல் காலை 8:00 முதல் இரவு 8:00 மணி வரை அழைக்கலாம். அதேபோல எங்கள் வாடிக்கையாளர் சேவை மின்னஞ்சல் முகவரி support@dhani.com-க்கும் கடிதம் எழுதலாம்.

தனி லோன்ஸ்அண்ட் சர்வீசஸ் லிமிடெட்-க்காக
(முன்னதாக இந்தியாபுல்ஸ் கன்ஸ்யூமர் ஃபைனான்ஸ் லிமிடெட்)
ஒப்பம்/-
மனீஷ் ரஸ்தாகி
கம்பெனி செயலர்

இடம் : தமிழ்நாடு
தேதி : 25.11.2023

ஆவணம் காணவில்லை

என் பெயர் பீர் முகமது, என் தாத்தாவிற்கு சொந்தமான வீடு மனை கதவு எண். பழைய எண் 72, புதிய எண்.42, லப்பை தெரு, புதுப்பேட்டை, சென்னை 600002ல் உள்ளது. இது பெரியமேடு சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட சர்வே எண்கள். 919/2 ஆவண எண். 96/1944 பதிவு நாள் 24.01.1944 அன்று பதிவு செய்யப்பட்டது. எனது பாதுகாப்பில் வைத்திருந்த ஆவணத்தை நான் கடந்த 00.00.2023ஆம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் அண்ணா நகரில் உள்ள எங்கள் குடும்ப வழக்கறிஞரை சந்திக்க எனது முகவரியில் இருந்து ஆட்டோவில் நான் அங்கு சென்று இருந்தேன், நான் ஆட்டோவை விட்டு இறங்கி கைப்பையில் இருந்த எனது அசல் ஆவணத்தை எடுத்துக் கொண்டு அங்குள்ள ஒரு தள்ளு வண்டி கடைக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு சிறிது நேரம் கழித்து பார்த்த போது எனது கைப்பை ஆவணங்களோடு காணவில்லை.

மேற்படி ஆவணம் யாரிடமாவது கிடைத்தால் எனது கைப்பேசி எண்ணிற்கு தகவல் தெரிவிக்கவும்.

பீர் முகமது,
கதவு எண். பழைய எண் 72,
புதிய எண்.48, லப்பை தெரு, புதுப்பேட்டை,
சென்னை 600002
கைப்பேசி எண் : 9791013510.
ஆதார் கார்டு நெ.6143 0194 5160

படிவம் ஏ

பொது அறிவிப்பு

(நொடித்தல் மற்றும் இந்திய திவால் நிலை வாரிய (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால் தீர்மான நடைமுறை) விதிமுறைகள் 2016, விதி 6-ன் கீழ்)

எம்விஆர் ஷிப்பிங் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டிற்கு கடன் வழங்கியவர்களின் கவனத்திற்கு

தொடர்புடைய விவரங்கள்		
1.	நிறுவன கடனாளர் பெயர்	**எம்விஆர் ஷிப்பிங் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்**
2.	நிறுவன கடனாளர் துவக்கத் தேதி	28.06.1991
3.	எந்த அதிகாரத்தின் கீழ் நிறுவன கடனாளர் துவக்கம்/பதிவு	ஆர்ஓசி – சென்னை – கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம்
4.	நிறுவன அடையாள எண்/ நிறுவன வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண்	U63090TN1991PTC021039
5.	நிறுவன கடனாளரின் பதிவு அலுவலக மற்றும் முதன்மை அலுவலக முகவரி (வேறு ஏதேனும் இருப்பின்)	பதிவு அலுவலகம்: 3, ஜாபர் சிராங் தெரு, சென்னை – 600 001.
6.	நிறுவன கடனாளரின் திவால் நிலை துவங்கப்பட்ட தேதி	22.11.2023 (உத்தரவு நகல் 23.11.2023 அன்று 16.53 மணிக்கு பெறப்பட்டது)
7.	திவால் தீர்மான நடைமுறை முடும் உத்தேச தேதி	19 மே 2024
8.	இடைக்கால தீர்மான நிபுணராக செயல்படும் திவால் நிபுணரின் பெயர் மற்றும் பதிவு எண்.	சத்யதேவி அலமுரி IBBI/IPA-002/IP-N00071/2017-18/10205
9.	குழுவில் பதிவு செய்துள்ளபடி இடைக்கால தீர்மான நிபுணரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	எண்.23, லேக் ஏரியா, 3வது குறுக்கு தெரு, நுங்கம்பாக்கம், சென்னை 600 034. மின்னஞ்சல் முகவரி: satyadevifcs@gmail.com
10.	தொடர்புக்கான இடைக்கால தீர்மான நிபுணரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	எண்.23, லேக் ஏரியா, 3வது குறுக்கு தெரு, நுங்கம்பாக்கம், சென்னை 600 034, தமிழ்நாடு, இந்தியா, மின்னஞ்சல் முகவரி: cirp.mvrshipping@yahoo.com
11.	கோரிக்கைகள் சமர்ப்பிக்க கடைசி தேதி	07.12.2023 (உத்தரவு பெறப்பட்ட தேதியான 23.11.2023 முதல் 14 நாட்கள்)
12.	பிரிவு 21, உப பிரிவு (6ஏ), உட்கூறு (பி)ன் கீழ் கடன் வழங்கியவர்கள் வகை, வேறு ஏதேனும் இருப்பின் இடைக்கால தீர்மான நிபுணரால் உறுதி செய்யப்பட்டது	பொருந்தாது
13.	வகையின் கீழ் கடன் வழங்கியவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக அடையாளம் காட்டப்பட்ட திவால் நிபுணரின் பெயர் (ஒவ்வொரு வகையிலும் 3 பெயர்கள்)	பொருந்தாது
14.	(a) தொடர்புடைய படிவங்கள் மற்றும் (b) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விவரங்கள் கிடைக்கும்	(a) இணைய இணைப்பு: https://ibbi.gov.in/home/downloads (b) பொருந்தாது

22.11.2023 தேதியிட்ட உத்தரவு எண்.CP/IB/127/CHE/2023–ன்படி எம்விஆர் ஷிப்பிங் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டுல் கார்ப்பரேட் திவால்நிலைத் தீர்மான செயல்முறையை தொடங்க 22.11.2023 அன்று நேரிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம், டிவிஷனல் பெஞ்ச் I, சென்னை உத்தரவிட்டுள்ளது என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

எம்விஆர் ஷிப்பிங் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டிற்கு கடன் வழங்கியவர்கள் வரிசை எண்.10க்கு எதிரே கொடுக்கப்பட்டுள்ள இடைக்கால தீர்மான நிபுணரின் முகவரிக்கு தங்கள் உரிமை கோரல்களை ஆதாரத்துடன் 07.12.2023 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். நிதி கடன் வழங்கியவர்கள் ஆதாரங்களுடன் மின்னணு மூலம் மட்டுமே தங்களின் கோரிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும். இதர கடன் வழங்கியவர்கள் ஆதாரங்களுடன் கூடிய தங்களது கோரிக்கைகளை நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அல்லது மின்னணு மூலமாகவோ சமர்ப்பிக்கலாம். பிரசை எண். 12–க்கு எதிரே பட்டியலிடப்பட்டுள்ள ஒரு பிரிவைக் சேர்ந்த நிதிக் கடன் வழங்கியவர்கள், இந்த கார்ப்பரேட் கடனாளிக்கு பொருந்தாது.

தவறான சான்றுகளை சமர்ப்பித்தால் அபராதம் விதிக்கப்படும்.

ஒப்பம்/-
CS சத்யதேவி அலமுரி
எம்விஆர் ஷிப்பிங் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டின்
இடைக்கால தீர்மான நிபுணர்
IBBI/IPA-002/IP-N00071/2017-18/10205

தேதி : 24.11.2023

படிவம் ஏ

பொது அறிவிப்பு

(திவால் நிலை மற்றும் இந்திய திவால் வாரிய (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால் தீர்மான நடைமுறை) விதிமுறைகள் 2016, விதி 6-ன் கீழ்)

பேஷன் இன்ப்ளூயன்ஸ் குளோத்திங் இந்தியா பிரைவேட் லிமிடெட்டிற்கு கடன் வழங்கியவர்களின் கவனத்திற்கு

தொடர்புடைய விவரங்கள்		
1.	கார்ப்பரேட் கடனாளர் பெயர்	**பேஷன் இன்ப்ளூயன்ஸ் குளோத்திங் இந்தியா பிரைவேட் லிமிடெட்**
2.	கார்ப்பரேட் கடனாளர் துவக்கத் தேதி	02.09.2011
3.	எந்த அதிகாரத்தின் கீழ் கார்ப்பரேட் கடனாளர் துவக்கம்/பதிவு	நிறுவனங்கள் சட்டம் 1956–ன் கீழ் துவக்கப்பட்டது மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013–ன் கீழ் அங்கீகரிக்கப்பட்டது. கார்ப்பரேட் விவகார அமைச்சகம் ஆர்ஓசி–சென்னையில் பதிவு செய்யப்பட்டது.
4.	கார்ப்பரேட் அடையாள எண்/ கார்ப்பரேட் கடனாளரின் வரம்பிற்குட்பட்ட அடையாள எண்	U52322TN2011PTC082161
5.	கார்ப்பரேட் கடனாளரின் பதிவு அலுவலக மற்றும் முதன்மை அலுவலக முகவரி (வேறு ஏதேனும் இருப்பின்)	எண். 1018, புதிய எண்.84, ஆர்ஆர் ஸ்ரீவாரு வளாகம், 2வது தளம், 6வது அவென்யூ, அண்ணா நகர், சென்னை, தமிழ்நாடு, இந்தியா, 600040.
6.	கார்ப்பரேட் கடனாளரின் திவால் நிலை துவங்கப்பட்ட தேதி	உத்தரவு தேதி: 22/11/2023 (23/11/2023 அன்று பெறப்பட்டது)
7.	திவால் தீர்மான நடைமுறை முடும் உத்தேச தேதி	20/05/2024
8.	இடைக்கால தீர்மான நிபுணராக செயல்படும் திவால் நிபுணரின் பெயர் மற்றும் பதிவு எண்.	முத்தரசுபுரம் கணேசன் சந்திரசேகரன் IBBI/IPA-003/00337/2021-2022/13620 (AFA Valid upto 30.05.2024)
9.	குழுவில் பதிவு செய்துள்ளபடி இடைக்கால தீர்மான நிபுணரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	முகவரி: பிளாட் எண் 104, தியாகா, ஹுவல் ஆப் ஹரிகானந்தனி, 5/63 ஓஎம்ஆர், சகாட்டூர், நாவலூர் (அஞ்சல்), செங்கல்பட்டு (மாவட்டம்), மெரினா மால் அருகில், சென்னை, தமிழ்நாடு, 600130 மின்னஞ்சல்: sekaranrp@gmail.com
10.	தொடர்புக்கான இடைக்கால தீர்மான நிபுணரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	தொடர்பு முகவரி : பிகேசி சென்டர், 31–இ, லட்சுமி தொழில் பேட்டை, நியூ லிங்க் சாலை, அந்தேரி (கி), மும்பை – 400 053. செயலாக்க மின்னஞ்சல் முகவரி :crp.fcinda@gmail.com
11.	கோரிக்கைகள் சமர்ப்பிக்க கடைசி தேதி	06/12/2023
12.	பிரிவு 21, உப பிரிவு (6ஏ), உட்கூறு (பி)ன் கீழ் கடன் வழங்கியவர்கள் வகை, வேறு ஏதேனும் இருப்பின் இடைக்கால தீர்மான நிபுணரால் உறுதி செய்யப்பட்டது	பொருந்தாது
13.	வகையின் கீழ் கடன் வழங்கியவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக அடையாளம் காட்டப்பட்ட திவால் நிபுணரின் பெயர் (ஒவ்வொரு வகையிலும் 3 பெயர்கள்)	பொருந்தாது
14.	(a) தொடர்புடைய படிவங்கள் மற்றும் (b) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விவரங்கள் கிடைக்கும்	இணைய இணைப்பு: https://www.ibbi.gov.in/home/downloads முகவரி : பொருந்தாது

M/s. பேஷன் இன்ப்ளூயன்ஸ் குளோத்திங் இந்தியா பிரைவேட் லிமிடெட்டிற்கு எதிரான கார்ப்பரேட் திவால் தீர்மான நடைமுறையை 22.11.2023 அன்று துவங்க நேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

M/s. பேஷன் இன்ப்ளூயன்ஸ் குளோத்திங் இந்தியா பிரைவேட் லிமிடெட்டிற்கு கடன் வழங்கியவர்கள் வரிசை எண்.10க்கு எதிரே கொடுக்கப்பட்டுள்ள இடைக்கால தீர்மான நிபுணரின் முகவரிக்கு தங்கள் உரிமை கோரல்களை ஆதாரத்துடன் 06/12/2023 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நிதி கடன் வழங்கியவர்கள் ஆதாரங்களுடன் மின்னணு மூலம் மட்டுமே தங்களின் உரிமை கோரல்களை சமர்ப்பிக்க வேண்டும். இதர கடன் வழங்கியவர்கள் ஆதாரங்களுடன் கூடிய தங்களது உரிமை கோரல்களை நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அல்லது மின்னணு மூலமாகவோ சமர்ப்பிக்கலாம்.

தவறான சான்றுகளை சமர்ப்பித்தால் அபராதம் விதிக்கப்படும்.

(ஒப்பம்/–)
முத்தரசபுரம் கணேசன் சந்திரசேகரன்,
இடைக்காலத் தீர்மான நிபுணர்
பேஷன் இன்ப்ளூயன்ஸ் குளோத்திங் இந்தியா பிரைவேட் லிமிடெட் விஷயத்தில்
IBBI Reg. No. IBBI/IPA-003/00337/2021-2022/13620
AFA Valid til : 30.05